# சிறுபஞ்சமூலம்

1. மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

மூவாது மூத்தவர் - ஆண்டுகளால் முதியவர் ஆகாதவர். ஆனால், அறிவினால் மூத்தவர்களுடன் ஒப்பானவர்.
நூல் வல்லார் - நூல்கள் பலவும் நன்கு கற்றவர்.
பொருள் - நன்மை தீமைகளை நன்கு உணர்ந்தவர். வயதில் இளையவராக இருந்தாலும், மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் ஆவர்.

2. காரியாசான் - குறிப்பு வரைக.

காரி - இயற்பெயர்.
ஆசான் - தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.
''மாக்காரியாசான்' என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது. மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். கணிமேதாவியாருடன் பயின்றவர்.
வாழ்ந்த காலம் - கி.பி ஐந்தாம் நூற்றாண்டு.

3. சிறுபஞ்சமூலம் குறிப்பு வரைக.

சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
சிறு - சிறிய
பஞ்சம் - ஐந்து
மூலம் - வேர்
ஐந்து சிறிய வேர் என்பது பொருள்.
கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி - ஆகியன.
இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள்

மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவதாய் அமைந்துள்ளன.
இவை வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

4. “விதைக்காமலே முளைக்கும் விதைகள்” இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

உலகில் நிலத்தின் ஒரு பகுதியில் குழி அமைத்து, பக்குவப்படுத்தி, நீரை ஊற்றி, எரு இட்டு விதைகளை விதைப்பர் அது முளைத்து மரம், செடி, பயிராகிப் பலன்களைத் தரும். இஃது உலக வழக்கம். ஆனால், இவ்வாறு எதுவும் செய்யாமல் விதையும் விதைக்காமல் முளைக்கும் விதைகளும் உண்டு. அதுபோலவே, பேரறிவுடையோர் பிறர் எடுத்துக் கூறாமலே அறிவினில் சிறந்து விளங்குவர்.